- குழுக்கள் தம் தீர்வுகளை நாடகப்படுத்துகின்றனர். ஒவ்வொரு அளிக்கையினையும் தொடர்ந்து (அல்லது குறைவான குழுக்களிருப்பின், ஒவ்வொரு பயிற்சி முடிவில்) மற்றைய மாணவர்கள் வழிகாட்டுவிதி சார்ந்த பின்னூட்டல்களை வழங்குவர்.

**மாற்றுவழி:**

- ஒரு கதையை விட, ஒரு எதிர்பாராத நிலையை உருக்காட்டும் படம் பயிற்சியின் அறிமுகத்துக்கும் அறிவுறுத்தலுக்கும் துணைசெய்யும்.
- வேறு காட்சிகளை மாணவர்களே பரிந்துரைக்கலாம்.

**குறிப்புகள்:**

- கலந்துரையாடலின் பின்னர் கருப்பொருளைப் பொறுத்து, தொடர்புடைய காட்சிக்கு வேண்டப்படும் மொழி வழிமுறைகளை மதிப்பாய்வு செய்தலைச் சேர்த்துக் கொள்ளுதல் பயனுடையது. இது பொருள்சார் சொற்களஞ்சியத்தை அல்லது பொதுவான கருத்தாடல் நோக்கங்களுக்கான பயன்தரு மொழி வழிமுறைகளை உள்ளடக்கலாம். அறிமுகத்தில் 2 இ யையும் பார்க்கவும்.
- சமூகத் தகைமையைக் கூட்டுதற்கு முரணறு தீர்வுக்கு வேண்டிய மதியுரைகள் குறிப்பாகப் பயனுடையவை. தொகுதி 4 "பல்பண்பாட்டுத் திறன்கள்", #1.5, 2.6, 4.7, 5.2, 5.5, 5.7, 6.7 ஆகியனவற்றையும் பார்க்கவும்.

# 27 கற்பனை நாடகம், எழுத்துருக்களை நாடகமாக்கல்

**இலக்கு**

*ஓர் எழுத்துருவிலிருந்து காட்சிகளை நாடகமாக்குதல் எழுத்துரு விளக்கத்துக்குத் துணைசெய்கிறது, படிக்கின்ற தொடர்களுக்கு உணர்ச்சியூட்டுதற்குப் பங்களிப்புச் செய்கிறது, மாணவர்களின் சொல் மற்றும் தொடர் திறனை மேம்படுத்தவும் விரிவாகவும் ஊக்குகிறது. எழுத்துருக்களை நாடகமாக்குதல் பா.மொ.க வுக்கு, ஓர் மதிப்புமிகு செயற்பாட்டுக்கும் - குறிப்பாக எழுத்து மற்றும் பேச்சுமொழி கல்விக்கு ஏனைய இலக்குப் பரப்புகளுக்கு, #8, 26, 28 யும் பார்க்கவும்.*

தரம் 2 - 9

20 - 30 மணித்துளிகள்

**கருவிகள்:**
சில தூண்டிகள்

**நடைமுறை:**

- நாடகமாக்குதற்குப் பொருத்தமான ஓர் எழுத்துரு அல்லது ஒரு கதை, மாணவர்கள் தாமாகப் படித்தல் அல்லது ஆசிரியர் உரத்துப் படித்தல் அல்லது ஆசிரியரால் சொல்லப்படல் என்பன இதன் ஆரம்பப் புள்ளியாக அமையும். எழுத்துருவுக்குப் பதிலாக ஒரு பட நூலாகவும் அமையலாம்.
- பொருத்தமான ஒரு காட்சியைத் தொடர்ந்து (அதில் பெருந் தொகை ஆட்கள் தோற்றுகின்றனர்) அல்லது கதையில் குறிப்பாக உணர்வூட்டும் இடத்தில், ஆசிரியர் படித்தல்களில் குறுக்கிடுகிறார். அடுத்து, மாணவர்கள் சிறு குழுக்களாகக் காட்சியை மீண்டும் நடிக்கும்படி அல்லது அக்காட்சியின் தொடர்ச்சியைக் கற்பனை செய்து மேடையேற்றும்படி அறிவுறுத்தப்படுகிறார்கள்.
- தெளிவான வழிகாட்டல்கள் வழங்கப்படுகின்றன: 5-10 மணித்துளிகள் ஏற்பாடு செய்யும் நேரம், மேடையேற்றல் ஆகக் கூடியது 5 மணித்துளிகள். மதிப்பீட்டுக்குப் பயன்படுத்த உறுதிப்படுத்தப்படும் அளவுகோல் அதேமாதிரியாக வரையறை செய்யப்பட்டுள்ளது. (பார்க்கவும் #26 மொழிப் பண்புகளையும் உள்ளடக்கிய அளவுகோல் நிரல்நிரையைப் பயன்படுத்துதல் நன்றாகும்.
- மாணவர்கள் குழுக்களாகப் பிரிக்கப்படுகின்றனர் அல்லது தங்களுக்குள் குழுக்களை அமைத்துக்கொள்கின்றனர். அவர்களுக்கு தங்கள் அளிக்கையை ஆயத்தம் செய்ய 5-10 மணித்துளிகள் இருக்கின்றன. அளிக்கை ஆகக் கூடியது 5 மணித்துளிகள் வரை செல்லலாம்.
- குழுக்கள் தம் தீர்வுகளை நாடகப்படுத்துகின்றனர். ஒவ்வொரு அளிக்கையினையும் தொடர்ந்து (அல்லது குறைவான குழுக்களிருப்பின், ஒவ்வொரு பயிற்சி முடிவில்) மற்றைய மாணவர்கள் வழிகாட்டுவிதி சார்ந்த பின்னூட்டல்களை வழங்குவர்.

**மாற்றுவழி:**

- நாடக எழுத்துருவைப் பொறுத்து, ஒவ்வொரு குழுவுக்கும் ஒரு காட்சி ஒதுக்கப்படுகிறது. நிறைவாக, பல்வேறு காட்சிகளும் தொடரில் ஒன்றாக இணைக்கப்பட்டு ஓர் ஒத்திசைவுள்ள அரங்கநாடகமாக அளிக்கை செய்யப்படுகின்றது.
- கற்பனை நடிப்புக்கும் எழுத்துருக்களை நாடகமாக்கலுக்கும் மேல்நிலை projector ஊடாக அல்லது நிழல் நாடகம் (விரற் பாவைகள்) ஆகியனவும் பொருத்தமாக அமையும்.

**குறிப்புகள்:**

- பயிற்சியைக் கொடுப்பதற்கு முன்னர் மாணவர்களுக்கு வேண்டிய சொற்களஞ்சியத்தினை வழங்குதற்கு இன்றியமையாத மொழி வழிமுறைகள் பலகையில் எழுதப்பட்டுக் கலந்துரையாடப்படும்.
- நாடக எழுத்துருவைப் பொறுத்து, கதாப்பாத்திரங்களுக்கு மேலாக, ஒரு மாணவர் கதைசொல்லும் வகிபாகத்தினை ஏற்கவேண்டும்.
- நடிகர்கள் ஒரு பெரிய அவையை நோக்கிப் பேசுவர். ஆகவே, இப் பயிற்சியில் தெளிவான ஒலிப்பின் இன்றியமையாமையினை மாணவர்களுக்கு சிறப்பாக அழுத்திக் கூறப்படவேண்டும். அளிக்கையின்போது கருத்தில் கொள்ளப்படும். வழிகாட்டு விதிகளுள் இதுவும் ஒன்று என்பதில் ஐயமில்லை.


# 28 பள்ளி நாடக அரங்கு

**இலக்கு**

*பள்ளி நாடக அரங்கில் ஆற்றுகை செய்தல் தன்விளக்கம், கட்டற்ற ஆற்றுகை, சைகைகளைப் பயன்படுத்தல், போலச் செய்தல், அரங்க மற்றும் விரிவாக்கம் பெற்ற மொழி ஆகியவற்றின் திறன்களை வலுவடையச்செய்கின்றது. அத்துடன் ஒருவரின் முதல்மொழியில் சொல் மற்றும் தொடர் திறனை விரிவாக்குகின்றது. பெறப்பட்ட தகைமைகள் (பார்க்கவும் #8, #27) இங்கு ஒன்றாகி பெரிய மேடையேற்றங்களின் ஊக்குவிப்புக் கட்டமைப்புக்குத் துணைசெய்கின்றன.*

தரம் 2-9

180 மணித்துளிகள்



**கருவிகள்:**
தூண்டிகள்

**நடைமுறை:**

- நாடகத்துக்கான ஓர் எழுத்துரு மாணவர்களுடன் சேர்ந்து எழுதப்படுகிறது, அல்லது ஏற்கெனவேயுள்ள கதையைத் தழுவி அரங்குக்கான உரையாடல் எழுத்துரு ஆக்கப்படுகிறது (இரண்டு மாற்றுகளும் எழுத்துப்பயிற்சிக்கு மிகப் பயனுடையன). ஏற்கெனவே ஏற்படுத்தப்பட்டு இருந்துவரும் வார்ப்பு ஒன்றினை மேடையேற்றலாம்.
- தொடர்ந்து தனிக் காட்சிகள் ஒத்திகை பார்க்கப்படும். இது ஒலிப்புப் பயிற்சிகள் மற்றும் உடல் மொழி, முகபாவம், சைகைகள் ஆகியவற்றை உள்ளடக்குகிறது, அவை கலந்துரையாடப்பட்டுச் செய்துபார்க்கப்படும்.
- துணைப் பொருட்கள் ஒழுங்கு செய்யப்பட்டு அளிக்கை திட்டமிடப்படுகிறது (ஓர் அறை, நிகழ்ச்சிகள், அழைப்புகள், சிற்றுண்டி, முதலியன).

III

